சுற்றறிக்கை இல: 07/2003.

எனதுஇல: என்பி/சிஓ/ஜீஎன்/02,
2003.08.28.

சகல கூட்டுறவு அபிவிருத்தி உதவி
ஆணையாளர்களுக்கும்.

### உறுப்புரிமையை உறுதிசெய்தல்

கடந்த காலங்களில் நடைபெற்ற கிளைக்குழுத்தெரிவு, இயக்குனர் சபைத் தெரிவுக்கான பொதுக்கூட்டங்களுக்கு உறுப்பினர் அல்லாதோர் சமுகமளித்து வாக்களித்தமை தொடர்பாக பல முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

மேலும் வாக்காளர் பட்டியலில் இறந்த உறுப்பினர்களின் பெயர்களும், வெளிநாட்டிற்குச் சென்ற உறுப்பினர்களின் பெயர்களும் உள்ளடக்கப்படுவதால் ஆள்மாறாட்டங்கள் நடைபெற இடமுண்டு எனக் காரணம் காட்டி தெரிவுகளை தாமதப்படுத்தும் சந்தர்ப்பங்களும் உள.

இத்தகைய நிலைகளில் இருந்து விடுபடுவதற்காக பின்வரும் வகையில் அமைந்த உறுப்பினர் அறிமுக அட்டை ஒன்றினை வாக்குரிமை பெற்றுள்ள சகல உறுப்பினர்களுக்கும் வழங்குதல் பொருத்தமானது எனக் கருதுகின்றேன்.

இவ்வறிமுக அட்டைக்கான செலவை உரிய சங்கத்தின் நிதியிலிருந்து செலவு செய்தல் வேண்டும். இதற்கான அங்கீகாரத்தினை சங்கத்தின் பொதுச்சபையில் மேற்கொள்ளுதல் வேண்டும். ஓர் உறுப்பினருக்கான செலவு ரூ.60/-ற்கு மேற்படலாகாது (லெமினேட்டில் உள்ளடங்களாக).

தங்கள் பிரிவில் உள்ள சகல பநோ.கூ.சங்க முகாமையுடன் கலந்தாலோசித்து உரிய நடவடிக்கையை நடைமுறைப்படுத்தும்படி வேண்டிக்கொள்கின்றேன்.

9cm

| சங்கத்தின் பெயர் | |
|---|---|
| | தொடர்இல................<br>அங்கத்துவஇல.............. |
| முழுப்பெயர் : ..............................<br>.............................................. | |
| முகவரி : ......................<br>..................................<br>.................................. | படம் |
| தே.அ.அ.இல :...................... | |
| பிறந்த திகதி :.................... | |

6 cm

9 cm

இவ்வறிமுக அட்டைக்குரிய திரு/திருமதி/செல்வி :....................
..........................................................................
அவர்கள் வரையுள்ள ...................................................
பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் ....................................
இலக்க .......................... கிளையின் பூரண உறுப்பினர்
என்பதனை உறுதிப்படுத்துகின்றோம்.

.............................. ..............................
தலைவர் செயலாளர்

திகதி : ............................ (இறப்பர் முத்திரை)

6cm

இ.இளங்கோவன்,
கூ.அ.ஆணையாளர்.